இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க,

# பாடசாலை அபிவிருத்திச் சபைகள்

# சட்டம்

---

*(1993, பெப்ருவரி மாதம் 26 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, பெப்ருவரி மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.35* *தபாற் செலவு : ரூபா 1.55*

# 1993 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சட்டம்

[1993, பெப்ருவரி மாதம் 26 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஒ. 104/92

பாடசாலை அபிவிருத்திச் சபைகளைத் தாபிப்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1993 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பாடசாலை அபிவிருத்திச் சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. நியமித்த தேதியிலிருந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாடசாலை அபிவிருத்திச்சபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சபைகளைத் தாபித்தல்.

3. பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்படும் ஒரு சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :— பாடசாலை அபிவிருத்திச் சபைகளின் அமைப்பு.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்; அதாவது அப்பாடசாலையின் அதிபர், இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பாடசாலையின் சிரேட்ட பிரதி அதிபர்;

(ஆ) பின்வரும் வேறு உறுப்பினர்கள் :—

(i) அப்பாடசாலையின் அதிபரால் அல்லது அவர் இல்லாதபோது அப்பாடசாலையின் சிரேட்ட பிரதி அதிபரால் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கூட்டமொன்றில் அத்தகைய ஆசிரியர்களால் இரகசிய வாக்குச்சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்பாடசாலையின் மூன்று ஆசிரியர்கள் அல்லது அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மூன்று பேர்களாக அல்லது அதற்கும் குறைவானவர்களாக இருக்குமிடத்து, அப்பாடசாலையில் கற்பிக்கின்ற எல்லா ஆசிரியர்களும் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை மூன்றிற்குக் குறைவாக இருக்கின்றவிடத்து, சபையின் ஏனைய உறுப்பினர்கள், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் மூன்றிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை மேவுவதற்குத் தேவைப்படும்வாறான எண்ணிக்கையான உறுப்பினர்களை அப்பாடசாலையின் பிள்ளைகளின் பெற்றோர், அப்பாடசாலையின் கடந்தகால மாணவர்கள், அப்பாடசாலைச் சமூகத்தின் நலன்விரும்பி

கள் என்போரிடையேயிருந்து இயலுமானவரை அத்தகைய வகுதிகள் அனைத்தும் சபையில் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படும்விதமாக, தேர்ந்தெடுத்தல் வேண்டும் அல்லது சபைக்குப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்;

(ii) அப்பாடசாலையின் அதிபரால் அல்லது அவர் இல்லாதபோது அப்பாடசாலையின் சிரேட்ட பிரதி அதிபரால் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்டதான, தற்போது அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களது கூட்டமொன்றில் இரகசிய வாக்குச்சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பெற்றோர்கள். அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரின் சட்டப் பாதுகாவலர் ஒருவர் இப்பிரிவின் நோக்கங்களுக்காக அம்மாணவரின் பெற்றோர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(iii) அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்றில் இரகசிய வாக்குச்சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாயுள்ள மூன்று பழைய மாணவர்கள் அல்லது அப்பாடசாலையில் அத்தகைய பழைய மாணவர் சங்கமெதுவும் இல்லாதவிடத்து, அப்பாடசாலையின் அதிபரால் அல்லது அவர் இல்லாதபோது சிரேட்ட பிரதி அதிபரால் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட அத்தகைய பழைய மாணவரின் கூட்டமொன்றில் இரகசிய வாக்குச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்பாடசாலையின் பழைய மாணவர்கள் மூவர். அத்தகைய பழைய மாணவர்கள் எவரும் இல்லாதவிடத்து அல்லது சமூகமாகவிருக்கின்ற பழைய மாணவர்களின் எண்ணிக்கை தேர்தலொன்றை நடாத்தும் நோக்கத்திற்கு போதியதல்லாததாக இருக்கின்றவிடத்து, சபையின் ஏனைய உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், அப்பாடசாலைச் சமூகத்தின் நலன்விரும்பிகள் என்போரிடையேயிருந்து அத்தகைய வகுதியினர் எல்லோரும் இயலுமானவரை சபையில் சமமாகப் பிரதிநிதித்துவம் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளும்விதமாக மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(iv) அப்பாடசாலை சமுதாயத்தின் நலன்விரும்பிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென, சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஆளொருவர்.

இப்பிரிவின்கீழ் பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றிற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் அல்லது பெயர் குறிதது நியமிப்பதில் அப்பாடசாலை ஆசிரியர்களும் அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் அப்பாடசாலையின் கடந்தகால மாணவர்களும் இயலுமான அளவுக்கு இருபாலாரும் சபையில் சமமாகப் பிரதிநிதித்துவம் பெறுவதை உறுதிப்படுத்த முயலுதல் வேண்டும்.

இப்பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இதனகத்துப்பின்னர் "தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்" ஒருவர் எனக் குறிப்பிடு செய்யப்படுவார்.

4. ஆளொருவர் —

உறுப்பாண்மைக்குத் தகைமை யீழத்தல்.

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராக;

(ஆ) பதினெட்டு வயதுக்குங் கீழ்ப்பட்டவராக;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டவராக அல்லது வெளிப்படுத்தப்பட்டவராக;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கி முறிந்த ஒருவராக வெளிப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராக;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் ஏதேனும் நீதிமன்றத்தால் (இடைநிறுத்தப்பட்ட தண்டனை உட்பட்ட) மறியற் றண்டனைத் தீர்ப்பொன்று விதிக்கப்பட்டவராக; அல்லது

(ஊ) கட்டிடங்களின் நிர்மாணத்திற்கு, அல்லது உபகரணங்களின் விநியோகத்திற்கு அல்லது சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்கும் நோக்கத்துக்கென அமைச்சரின் அமைச்சின்கீழ் அல்லது உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின்கீழ் அல்லது மாகாண அமைச்சரின் அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவராக அல்லது அத்தகைய ஆளின் பெற்றோராக, வாழ்க்கைத்துணையாக, சகோதரராக அல்லது சகோதரியாக அல்லது கட்டிடங்களின் நிருமாணத்திற்கு அல்லது உபகரணங்களின் விநியோகத்திற்கு அல்லது சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்கும் நோக்கத்திற்கென அமைச்சரின் அமைச்சுடன் அல்லது உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுடன் அல்லது மாகாண அமைச்சரின் அமைச்சுடன் பதிவுசெய்யப்

பட்ட கம்பெனியொன்றினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது அதில் அக்கறையுள்ள ஆளொருவர் அல்லது அத்தகைய ஆளின் பெற்றார் ஒருவர், வாழ்க்கைத்துணைவர், அல்லது சகோதரர் அல்லது சகோதரியாக—

இருப்பின் அவர் பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றின் உறுப்பினரொருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து இருந்துவருவதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

**சபையின் அல்லது உப குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களின் பதவிக் காலம்.**

5. (1) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் அல்லது உபகுழுவொன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அப்பாடசாலையின் அதிபருக்கு அல்லது சிரேட்ட பிரதி அதிபருக்கு முகவரியிடப்பட்ட கடிதமொன்றின் மூலம் எந்த நேரத்திலும் அவரது பதவியை விட்டு விலகலாம்.

(2) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட உபகுழுவொன்றின் அல்லது சபையொன்றின் தெரிவு செய்யப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், 4 ஆம் பிரிவில் காட்டப்பட்ட தகைமையீனங்களுள் எதற்கும் அமைந்தவராக வந்தால் அல்லது பாடசாலையின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நடத்தைக்குக் குற்றவாளியாக வந்தால், மொத்தத்தில் ஆகக் குறைந்தது பத்து ஆசிரியர்களினதும் பெற்றார்களினதும் கடந்தகால மாணவர்களதும் வேண்டுகோளின்பேரில், அதிபரால் அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட அப்பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர் அத்துடன் கடந்த கால மாணவர்களின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம், அத்தகைய பாடசாலையின் ஆசிரியர்களும் பெற்றோரும் கடந்தகால மாணவர்களும் அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) ஏதேனும் ஆண்டில் டிசெம்பர் முப்பத்தோராம் நாளன்று அத்தேதிக்கு நேர்முந்திய பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதியின் போது அல்லது அத்தேதிக்கு நேர்முந்திய பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியின் அத்தகைய பாகத்தின் போது, அவர், அத்தகைய சபையின் அல்லது உபகுழுவின் உறுப்பினரொருவராக இருந்து விடயத்துக்கேற்றுற்போல, அத்தகைய சபையினால் அல்லது உபகுழுவினால் நடாத்தப்பட்ட கூட்டங்களில் எண்ணிக்கையில் அரைவாசிக்காவது வருகை தரத் தவறியுள்ளவரான, பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகயீனம் காரணமாக அல்லது முதலில் அத்தகைய சபையின் அல்லது உபகுழுவின் அனுமதியைப் பெற்றிருந்து அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குச் சமுகமளிக்காதிருந்தாலன்றி, அவர் மேலே சொல்லப்பட்ட அவ்வாண்டின் டிசெம்பர் முப்பத்தோராம் தேதியிலிருந்து விடயத்துக்கேற்றுற்போன்று அத்தகைய சபையின் அல்லது உபகுழுவின் உறுப்பினராக இருப்பதிலிருந்து பதவியை வறிதாக்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பாடசாலையொன்றின் ஆசிரியரொருவராக உள்ளார் என்னும் அவரது பயனைக்கொண்டு, பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டவொரு சபையின் அல்லது உபகுழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அத்தகைய பாடசாலையின் ஆசிரியரொருவராக அவர் இல்லாதொழிவதன்மீது விடயத்துக்கேற்றுற்போன்று அத்தகைய சபையின் அல்லது உபகுழுவின் உறுப்பினரொருவர் என்ற பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(5) பாடசாலையொன்றின் மாணவரொருவரின் ஒரு பெற்றார் அல்லது பாதுகாவலர் என்னும் அவரது பயனைக்கொண்டு பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றின் உபகுழுவொன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவரது பிள்ளை அல்லது அவரது பிள்ளைகளுள் கடைசிப் பிள்ளை, அத்தகைய பாடசாலையின் மாணவர்களாக இல்லாதொழிவதன் மீது, விடயத்துக்கேற்றுற் போன்று, அத்தகைய சபையின் அல்லது உபகுழுவின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(6) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் அல்லது உபகுழுவொன்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பு காரணமாக, பதவியிலிருந்து, அகற்றப்படுவதன் காரணமாக அல்லது வேறு காரணத்தினால், பதவியை வறிதாக்கும் விடயத்தில், அவ்வுறுப்பினர் இடத்தில் செயலாற்றுவதற்கென, 3 ஆம் பிரிவின் அல்லது 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, வேறோர் ஆள் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படலாம். பதவியை வறிதாக்குகின்ற உறுப்பினரொருவரின் இடத்துக்குப் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளெவரும், அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் அல்லது உபகுழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சுகயீனம் காரணமாக அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக ஏதேனும் காலப்பகுதியின்போது அவரது பதவிக்குரிய பணிகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராகவிருந்தால், அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென விடயத்திற்கேற்றுற் போன்று 3 ஆம், பிரிவின் அல்லது 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு வேறோர் உறுப்பினர் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படலாம்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றின் அல்லது உபகுழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் என்பதுடன்

அத்தகைய உறுப்பினர் விடயத்துக்கேற்றுற்போன்று மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீளப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(9) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட சபையொன்றின் அல்லது உபகுழுவின் செயல் அல்லது முடிவு எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் உள்ளது அல்லது உறுப்பினரொருவரின் தேர்தலில் அல்லது பெயர்குறித்த நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினுல் மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

சபையொன்றின் கூட்டங்கள்.

6. (1) பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்று ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டம் கூடுதல் வேண்டும்.

(2) அத்தகைய சபையின் தவிசாளர் அத்தகைய சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய சபையின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளர் இல்லாதவிடத்து, சிரேட்ட பிரதி அதிபர் அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குதல் வேண்டும். அதிபர், சிரேட்ட பிரதி அதிபர் ஆகிய இருவரும் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதாராதவிடத்து, அதிபரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) அத்தகைய சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் ஆள் உட்பட்ட எழு ஆதல் வேண்டும்.

(4) அத்தகைய சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுசெய்ய எழும் ஏதேனும் வினு சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கொன்றினுல் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும் விடயத்தில் அத்தகைய சபையின் தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(5) அத்தகைய சபையின் ஆகக்குறைந்தது ஐந்து உறுப்பினர்களின் எழுத்திலான வேண்டுகோளின்பேரில் அத்தகைய வேண்டுகோள் அத்தகைய சபையின் தவிசாளருக்கு விடுக்கப்படுவதன்பேரில் ஒரு வாரத்திற்குள் 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அத்தகைய சபையின் செயலாளரால் அத்தகைய சபையின் விசேட கூட்டமொன்று கூட்டப்படுதல் வேண்டும்.

(6) அத்தகைய சபையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களின் செயல்முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றின் செயலாளர்.

7. பாடசாலையொன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபை ஒவ்வொன்றிற்கும், அத்தகைய சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் அந்தப் பாடசாலைக்கெனத் தாபிக்கப்படும் சபையின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது. செயலாளர், அத்தகைய சபையின் தவிசாளரினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, சபையின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். செயலாளர் அத்தகைய கூட்டங்களின் கூட்ட அறிக்கைப் பதிவொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

சபையொன்றின் பணிகள்.

8. (1) ஒரு பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பிலான கருமங்களில் அத்தகைய பாடசாலையின் அதிபருக்கும் அவர் இல்லாவிடின் சிரேட்ட பிரதி அதிபருக்கும் ஆலோசனை அளிப்பதும் உதவிசெய்வதும், பின்வருவனவும் பாடசாலையொன்றிற்குத் தாபிக்கப்பட்ட சபையொன்றின் பணிகளாதல் வேண்டும் :—

(அ) பாடசாலையின் நடப்புத் தேவைகளையும் செயற்பாட்டு முறையையும் மதிப்பீடு செய்தல், கல்விசார் பாடவிதானத்திற்கும் போதனை முறைகளுக்கும் சீர்திருத்தங்களை தேசிய கல்வி நிறுவகத்துக்கு விதந்துரைத்தல்; அத்துடன் பாடசாலையின் பெற்றோர், ஆசிரியர், மாணவர் என்போரிடையே கூடுதலான கூட்டிணைவை ஊக்கப்படுத்துதல்;

(ஆ) விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்விசார், கவின்கலைகள்சார், சமூக, தொழிற்கல்வி ஆகிய விடயங்களை ஊக்கப்படுத்துதலும் பாடசாலையில் ஏனைய மேலதிக பாடவிதான செயற்பாடுகளை ஊக்கப்படுத்துதலும்;

(இ) (கலாசார இடை மற்றும் சமய இடைவிழாக்கள் உட்பட) கலாசார சமய மற்றும் நல்லொழுக்கச் செயற்பாடுகளை பாடசாலையில் ஊக்குவித்தல்;

(ஈ) பாடசாலையில் உள்ளக கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதிலும் பேணுவதிலும் உதவுதல்;

(உ) நூலகங்கள், கல்வி உபகரணம், ஏனைய கல்விக்கான உதவிகள் என்பன தொடர்பில் பாடசாலையின் வசதிகளைச் சீர்திருத்துவதிலும் விரிவாக்குவதிலும் உதவியளித்தல்;

(ஊ) பாடசாலைப் புத்தகங்கள், மதிய உணவு முத்திரைகள், மாணவர் சீருடைகள் என்பவற்றிற்காக பாடசாலையின் தேவைப்பாடுகளைக் கண்டறிதலும் அவற்றை விநியோகித்தலும்;

(எ) பாடசாலைச் சமூகத்தின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் பேணும் கருத்துடன் அதன் நலன்புரிச் செயற்பாடுகளை ஆதரித்தலும் வலுப்பெறச் செய்தலும்;

(ஏ) ஒரு புறத்தில் பாடசாலைக்கும் மறு புறத்தில் சமூகத்திற்கும் சமய நிறுவனங்களுக்கும் இடையே ஒன்றிணைந்த உறவுமுறையைப் பேணும் விதமாக வெகுசனத் தொடர்புச் சாதனங்களுடன் ஆக்கபூர்வமாகச் செயற்படுதல்;

(ஐ) அரசாங்க ஒதுக்கீடுகளையும் சமூகத்திலிருந்து கிடைக்கும் உதவுதொகைகளையும் கூடியளவு பயன்படுத்துவதற்கு பாடசாலைக்கு உதவுதலும் அவற்றை முறையாகச் செலவழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும்;

(ஒ) மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு அதற்காக இரக்கப்படும் சிந்தையையும் பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர்களுடன் வேலையைப் பங்கேற்பதனையும் கூட்டு வேலை முறையையும் ஒழுங்குசெய்யுந் திறனையும் பாடசாலை மாணவர்களிடையே ஊட்டும் கருத்துடன் அவர்களின் ஆளுமையை விருத்திசெய்வதில் உதவுதல்;

(2) ஓராம் உட்பிரிவில் உள்ளது எதுவும் பாடசாலை ஒன்றிற்காகத் தாபிக்கப்படும் சபை ஒன்றிற்கு அந்தப் பாடசாலையின் அதிபருக்கு அப் பாடசாலை தொடர்பிலான ஏதேனும் கல்விசார், நிருவாக, ஆளணி அல்லது ஒழுக்காற்றுக் கருமம் பற்றி ஆலோசனை கூறுவதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

உபகுழுக்கள்.

9. (1) ஆறும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு பாடசாலைக்கும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட உப குழுக்கள் அமைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட ஒவ்வொரு உப குழுவினதும் பணி அட்டவணையில் அந்த உப குழுக்கள் குறித்தொதுக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் அப்பாடசாலைக்கெனத் தாபிக்கப்பட்ட சபைக்கு விதப்புரைகள் செய்வதாதல் வேண்டும்.

(2) பாடசாலை ஒன்றிற்கென அமைக்கப்பட்ட உபகுழு ஒவ்வொன்றும் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இயலுமானவரை அப்பாடசாலையின் ஆசிரியர் ஒருவரையும், அப்பாடசாலையின் மாணவர் ஒருவரின் பெற்றோர் ஒருவரையும், அப் பாடசாலையின் கடந்தகால மாணவர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏழாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபை ஒன்றின் உறுப்பினர் ஒருவர், இப் பிரிவின் கீழ் அப்பாடசாலைக்கென அமைக்கப்பட்ட உபகுழு ஒன்றின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராகார்.

(4) ஒவ்வோர் உபகுழுவினதும் உறுப்பினர்கள் அப்பாடசாலைக்கெனத் தாபிக்கப்பட்ட சபைக்கான உறுப்பினர்களின் தேர்தலுக்காக மூன்றும் பிரிவின் (ஆ) எனும் பந்தியின் முறையே (i) (ii) அத்துடன் (iii) ஆகிய உப பந்திகளின் கீழ் நடாத்தப்படும் கூட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் பாடசாலைக்கெனத் தாபிக்கப்பட்ட சபை ஏதேனும் உப குழுவின் செயற்பாடுகள் மேலதிக உறுப்பினர்களைத் தேவைப்படுத் தக்கூடிய அத்தகையனவென சபை கருதினால், அப்பாடசாலைக்கென அமைக்கப்பட்ட அத்தகைய உபகுழுவின் உறுப்பாண்மையை அதிகரிக் கலாம். அத்தகைய உறுப்பாண்மையை அதிகரிப்பதில் அத்தகைய உப குழுவில் அப்பாடசாலையின் ஆசிரியர்களும், அப்பாடசாலையின் மாண வர்களது பெற்றோர்களும், அப்பாடசாலையின் கடந்தகால மாணவர்களும் இயலக்கூடியளவு சமமாகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் விதமாக சபை முயற்சி எடுக்க வேண்டும்.

(6) பாடசாலை ஒன்றிற்கான ஏதேனும் உபகுழுவை அமைப்பதற்குப் போதிய எண்ணிக்கையினரான ஆட்கள் இல்லாதவிடத்து அல்லது இச் சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லா உப குழுக்களையும் அமைக்க வேண்டியது அப்பாடசாலையின் செயற்பாடு களுக்கு அவசியமற்றதாக இருக்குமிடத்து, அப்பாடசாலைக்கெனத் தாபிக் கப்பட்ட சபை, அப்பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஏற்றவிதமாக அத்தகைய எண்ணிக்கையினவான உபகுழுக்களைத் தாபிக்கலாம் என் பதுடன் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட உப குழுக்களின் பணிகளை அவ்வாறு அமைக்கப்பட்ட உபகுழுக்களிடையே யின குறித்தொதுக்கலாம்.

(7) பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அப்பாடசாலைக்கென அமைக்கப்பட்ட உபகுழு ஒன்றின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை தாங்குதல் வேண்டும்.

(8) ஒரு பாடசாலைக்கென அமைக்கப்பட்ட உபகுழு மாதத்தில் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(9) ஒரு பாடசாலைக்கென அமைக்கப்பட்ட உபகுழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் தலைவர் உட்பட மூன்று உறுப்பினர் களாதல் வேண்டும்.

(10) பாடசாலை ஒன்றிற்கென அமைக்கப்பட்ட ஏதேனும் உபகுழுவின் எல்லா சிப்பாரிசுகளும் முடிவுகளும் அப்பாடசாலைக்கென அமைக்கப்பட்ட சபைக்கு அதன் பரிசிலனைக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. (1) பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்படும் சபை ஒவ்வொன் றும், பாடசாலை அபிவிருத்தி நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன் றைப் பேணுதல் வேண்டும். பாடசாலை அபிவிருத்தி நிதியம்.

(2) அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏதேனும் மாகாண சபையிட மிருந்து அத்தகைய சபையினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல் லாப் பணங்களும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன் முன்னர் வசமிக்கட்டணங்களாக அத்தகைய பாடசாலையினால் பெறப்படும் எல் லாப் பணங்களும் அத்தகைய பாடசாலை நிதியுதவிக்காக நடாத்தப்பட்ட திட்டங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட எல்லாப் பணங்களும் பாடசாலையின்

நலன்விரும்பிகளிடமிருந்து சபையினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லா தன்னிச்சையான உதவுதொகைகளும் அத்தகைய சபையினால் பேணப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அத்தகைய சபையினால் பேணப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்குச் செலுத்தப்படும் அத்தகைய எல்லாப் பணங்களும் உதவுதொகைகளும் அத்தகைய சபையின் பெயரில் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கருத்திற்குள்ளாக ஏதேனும் உரிமமாக்கப்பட்ட வர்த்தக வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(4) பாடசாலை ஒன்றுக்கெனத் தாபிக்கப்பட்ட சபையானது தோதான கல்வியதிகாரியினால் விதிக்கப்படும் வழிகாட்டு நெறிகளுக்கமைய, பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் அதனால் பேணப்படும் பணங்களைப் பாடசாலையின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதல் வேண்டும்.

(5) அத்தகைய சபையினால் பேணப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு அளிக்கப்படும் உதவுதொகை ஒவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்குப் பணமாகக் கொடுக்கப்பட்டதொரு நன்கொடையெனக் கருதப்படுதல் வேண்டும்.

**சபைக்கான பொருளாளர்.**

11. (1) பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு சபைக்கும் 3 ஆம் பிரிவின் (ஆ) எனும் பந்தியின் (i) உட்பந்தியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட சபை உறுப்பினர்களிடையேயிருந்து சபையினால் தெரிவுசெய்யப்படும் பொருளாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

(2) பொருளாளர் 10 ஆம் பிரிவின் கீழ் சபையினால் பேணப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் பெறுகைகள் செலவினங்கள் அத்துடன் அத்தகைய நிதியத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றின் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லாக் கணக்குப் புத்தகங்களும் அமைச்சரின் அமைச்சின் அல்லது கல்வித் திணைக்களத்தின் அல்லது மாகாண அமைச்சரின் அமைச்சின் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களின் பரிசோதனைக்காக கிடைக்கக் கூடியனவாக இருத்தலும் வேண்டும்.

(3) பாடசாலை ஒன்றிற்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு பணங்களை மீளப் பெறுவதற்கான எல்லாக் காசோலைகளும் அத்தகைய சபையின் பொருளாளரினாலும் தலைவரினாலும் அல்லது செயலாளரினாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) பத்தாம் பிரிவின் கீழ் சபையினால் பேணப்படும் பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் எல்லாக் கணக்குகளும் அத்தகைய சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வு தொடர்புபட்ட பஞ்சாங்க ஆண்டு முடிவடைவதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக அத்தகைய சபையின் பொருளாளரினால் அத்தகைய கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய கணக்காய்வாளர் அப்பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள்ளாக அத்தகைய கணக்காய்வு தொடர்பான அறிக்கையொன்றை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் சபையானது கணக்காய்வு செய்யப்பட்ட அத்தகைய கணக்குகளை பெற்றதிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக தோதான கல்வி அதிகாரியிடம் சபை சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவிலுள்ள எதுவும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை மதிப்புக் குறைப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

சபையொன்றைக் கலைத்தலும் மீள அமைத்தலும்.

12. (1) தோதான கல்வியதிகாரி, 3 ஆம் பிரிவின் கீழ் ஒரு பாடசாலைக்கெனத் தாபிக்கப்பட்ட சபையொன்று இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றவில்லை அல்லது அத்தகைய பணிகளைத் திறம்பட நிறைவேற்றவில்லையெனத் திருப்திப்படுமிடத்து, அவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய சபையைக் குலைக்கலாம் என்பதுடன், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அந்தப் பாடசாலைக்கென புதிய சபையொன்றைத் தாபிக்கச் செய்தலும் வேண்டும்.

(2) பாடசாலையொன்றுக்காத் தாபிக்கப்பட்ட சபையொன்று குலைக்கப்படும் பட்சத்தில், குறித்தொதுக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் விடயத்தில் மாகாண கல்விப் பணிப்பாளர் அத்துடன் வேறேதேனும் பாடசாலையின் விடயத்தில் பெரும்பாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அத்தகைய பாடசாலைக்குப் புதிய சபையொன்று அமைக்கப்படும் காலம்வரை, இச்சட்டத்தினால் அத்தகைய சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

13. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நெறிகளுக்கும் பயன் கொடுக்கும் அல்லது அவற்றைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்கு விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அத்தகைய ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவான அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதுவும் எதற்கும் பங்கமின்றி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாக அவ்வாறு கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**நிலைபெயர் கால ஏற்பாடு.**

14. (1) நியமித்த தேதியன்று ஏதேனும் பாடசாலையில் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதே முறையில் தாபிக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சபையும் உப குழுக்களும் இருக்கின்றவிடத்தும் அத்தகைய சபைகளும் உப குழுக்களும் தோதான கல்வி அதிகாரியினால் கசெற்றில் அங்கீகரிக்கப்படுகின்றவிடத்தும், அத்தகைய சபைகளும் உபகுழுக்களும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டு அமைக்கப்பட்டு இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சபையின் அல்லது உபகுழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்துடன் நியமிக்கப்பட்ட தேதியன்று பதவி வகிக்கின்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றுண்டு காலப்பகுதியொன்றிற்கு விடயத்திற்கேற்றாற்போல் அத்தகைய சபையில் அல்லது உபகுழுவில் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(3) தோதான கல்வி அதிகாரி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத அத்தகைய பணிப்புக்களை இச்சட்டத்தினால் சபைக்கு அல்லது உபகுழுவிற்கு குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்தகைய சபையை அல்லது உபகுழுவை இயலச் செய்வதற்கு அவசியமானதென அல்லது உசிதமானதென அவருக்குத் தோன்றும் அத்தகைய பணிப்புகளை விடுவிக்கலாம்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

15. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

16. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"தோதான கல்வி அதிகாரி" என்பது —

(அ) குறித்துரைக்கப்பட்ட பாடசாலை ஒன்று தொடர்பில் அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் என்று ; அத்துடன்

(ஆ) ஏதேனும் வேறு பாடசாலை தொடர்பில், மாகாண அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் என்று,

பொருளாகும்.

"பெரும்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்" என்பது மாகாண கல்விப் பணிப்பாளரின் கீழ் மாகாணமொன்றின் பெரும்பாகம் ஒன்றில் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் என்று பொருள்படும்;

"உள்ளூர் அதிகார சபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படுவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் நேரொத்த தன்மையாகவுள்ள அல்லது அவற்றிற்கு ஏற்புடையதாகவுள்ள தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது கல்வி என்னும் விடயமானது குறித்தொதுக்கப்பட்டவரான அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருள்படும்;

"மாகாணசபை" என்பது அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணசபை என்று பொருளாகும்;

"மாகாணப் பணிப்பாளர்" என்பது மாகாணமொன்றில் கல்விக்குப் பொறுப்பான அலுவலர் என்று பொருளாகும்;

"மாகாண அமைச்சர்" என்பது கல்வி என்னும் விடயமானது குறித்தொதுக்கப்பட்டவரான, மாகாணம் ஒன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் என்று பொருளாகும்;

"சிரேஷ்ட பிரதி அதிபர்" என்பது அதிபர் வருகை தராதபோது அப்பாடசாலையின் அதிபரின் கடமைகளைப் புரிவதற்கு தோதான கல்வி அதிகாரியினால் நியமிக்கப்பட்ட அல்லது அப்பாடசாலையின் அதிபரால் அதிகாரமளிக்கப்பட்டவரான பாடசாலையொன்றின் பயிற்றுவிக்கும் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவரை உள்ளடக்குகின்றது :

"பாடசாலை" என்பது ஒரு அரச பாடசாலை என்று பொருளாகும் :

"குறித்துரைக்கப்பட்ட பாடசாலை" என்பது அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் ஒரு தேசிய பாடசாலையாக வகுப்பாக்கம் செய்யப்பட்ட ஒரு பாடசாலையெனப் பொருளாகும்.

## அட்டவணை (பிரிவு 9)

**(அ) கல்வி அபிவிருத்தி உபகுழு**

8(அ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஆ) கூட்டுப்பாடவிதான செயற்பாடு உபகுழு**

8(ஆ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(இ) நல்லொழுக்க அபிவிருத்தி உபகுழு**

8(இ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஈ) பௌதிக மூலவளங்கள் உபகுழு**

8(ஈ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(உ) நூலகம் மற்றும் கல்வி உபகரண உபகுழு**

8(உ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஊ) பாடசாலைப் புத்தகங்கள், மதிய உணவு, சீருடைகள் உபகுழு**

8(ஊ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(எ) நலனோம்பு மற்றும் சமூக உறவுகள் உபகுழு**

8(எ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஏ) தொடர்பு உபகுழு**

8(ஏ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஐ) நிதி உபகுழு**

8(ஐ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு

**(ஒ) மாணவர் ஆளுமை அபிவிருத்தி உபகுழு**

8(ஒ) என்னும் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள கருமங்கள் மீதான விதப்புரைகளைச் செய்வதற்கு